# பகுதி - 1

## முன்னுரை மற்றும் ஆய்வுமுறை

## பிரிவு 1

## முன்னுரை

**1.1.1.** உள்ளூர் சுய ஆட்சியே இந்திய தேசிய இயக்க சித்தாந்தத்தின் மையக் கருத்தாக இருந்து வந்தது. இதை மனதிற் கொண்டுதான் மகாத்மா காந்திஅடிகள் அவர்கள், " இருபது நபர்கள் மையமானதொரு இடத்தில் அமர்ந்து கொண்டு உண்மையான மக்களாட்சியை செயல்படுத்திவிட முடியாது; மக்களாட்சி என்பது ஒவ்வொரு கிராமத்தையும் சேர்ந்த மக்களால் அடிமட்டத்திலிருந்து செயல்படுத்தப்பட வேண்டும்' என்று கூறினார்கள்.

**1.1.2.** சுதந்திரத்தை வென்றெடுத்தோம்; ஆனால், அதிகாரக்குவிப்பின் காரணமாக அச்சுதந்திரம் முழுமை பெறவில்லை. பெருமளவிலான முதலீட்டுடன் செயற்படுத்தப்பட்ட மூலதன முனைப்புத் திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்று சேரவில்லை. இந்த நலிவுக்கான மூலகாரணத்தை விவரித்த பண்டித நேரு அவர்கள்,"இலட்சக் கணக்கான கிராமங்களை முன்னேற்றுவதென்பது சாதாரணமானதல்ல; மக்களே பொறுப்பேற்க முன்வரவேண்டும். அவர்களைக் கலந்தாலோசித்தால் மட்டும் போதாது அவர்களிடம் மெய்யான அதிகாரங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும்." என்று கூறினார்கள்.

தமிழக முன்னாள் முதல்வரும் தொலைநோக்குச் சிந்தனை படைத்தவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்தும் அதுவாகத்தானிருந்தது. "மக்களாட்சியின் மூலாதாரமாக அமைபவை ஊராட்சிகளே. அவற்றை வலுப்படுத்தினாலன்றி நம்முடையமக்களாட்சி வலிமையும் துடிப்பு மிகுந்ததுமாயிராது," என்று அவர் குறிப்பிட்டார்.

**1.1.3.** இக்கனவை நனவாக்குவது,, மிகக் கடினமானப் பணியாகும். அதிலும் குறிப்பாக, இந்தியா பல இனங்களையும் மரபியல்புகளையும் கொண்ட மக்கள் தொகை செறிந்த ஒரு பரந்த நாடு. இத்தகையதொரு பெரிய தேசத்தை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், நிர்வகிப்பது கடினம்; அப்படியே நிர்வகித்தாலும், அது திறமையற்ற, நெறிமுறைக்கு மாறான நிர்வாகமாகவே அமையும். இதனை உணர்ந்துதான், முன்னாள் பாரதப் பிரதமர் திரு ராஜீவ் காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை அறிமுகம் செய்யும் போது, "இது கோடிக்கணக்கான இந்தியர்களின் தலைவாசலுக்கே ஜனநாயகத்தைக் கொண்டு வரும் ஒரு புரட்சியாகும்; லட்சக்கணக்கான ஆதி திராவிட மற்றும் பழங்குடி இன மக்களுக்கும் நமது நாட்டு மக்கள் தொகையில் பாதியாக இருக்கிற மகளிருக்கும் வாய்ப்புக் கதவுகளைத் திறந்து விடுகிற ஒரு புரட்சியாகும்" என்று குறிப்பிட்டார்கள்.

1.1.4. இந்திய அரசியலமைப்பின் 73 மற்றும் 74–வது திருத்தச் சட்டங்கள், 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 24–ம் நாளன்று செயலுக்கு வந்தன. இத்திருத்தச் சட்டங்கள், அரசியல் அதிகாரம் அடிமட்ட நிலைக்கு மாறுவதை உணர்த்துகிற முக்கியமானத் திருப்புமுனையாக அமைந்தன. இதனை காந்திஜியின் கிராம சுயராஜ்யத்தை அடைவதற்கான நமது முயற்சியில் நாம் பெற்ற விரைவானதொரு முன்னேற்றம் எனலாம். மாநிலங்கள், இத்திருத்தங்களை ஏற்பளித்து ஒப்புதல் சட்டங்களை நிறைவேற்றின. இத்திருத்தங்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கு, சட்டபூர்வமான அரசியலமைப்பு அந்தஸ்து அளிப்பதோடு மட்டுமின்றி, சட்ட மன்றங்கள், சட்டமியற்றுவதன் மூலம், அவை சுய ஆட்சி அமைப்புகளாகச் செயல்படத் தேவையான அதிகாரங்களையும் ஆணையுரிமைகளையும் வழங்கலாம் எனத் தெள்ளத் தெளிவாக வரையறுத்துள்ளன. இதனால் ஒரு நம்பிக்கை உணர்வு எழுந்தது. நாடெங்கிலும் உள்ளூர் சுய ஆட்சி வலுப்பெறுவது குறித்து ஓர் எழுச்சி ஏற்பட்டுள்ளது. உள்ளாட்சி மன்ற விவகாரங்களில், வளர்ச்சிப்பணிகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதில் மக்கள் அதிக அளவில் பங்கேற்க வாய்ப்பு உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. உள்ளாட்சி மன்றங்கள் மக்களின் தேவைகளையும் விருப்பங்களையும் நன்கு உணர்ந்து செயலாற்றும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.